# 981

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

மக்களின் அன்றாட வாழ்வில் போக்குவரத்து என்பது மிக இன்றியமையாத ஒன்றாக ஆகிவிட்டது. அது வாழ்க்கையின் ஓர் அங்கம் ஆகும். தினமும் தொழிலோ, படிப்போ, மருத்துவமோ அல்லது சொந்த காரணங்களுக்காவோ ரெயில் பயணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆங்கிலேயர் இந்த நாட்டுக்குச் செய்த நன்மை ஒன்று உண்டு என்றால், அது நிச்சயமாக ரெயில் போக்குவரத்துதான் என்பதை யாராலும் மறந்துவிட முடியாது.

பயணிகள் ரெயில்களைப் பொறுத்தமட்டில், தென்னக ரெயில்வே பயணிகள்தான் ஒழுங்காகப் பயணச்சீட்டு எடுத்து பயணம் செய்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், பதிவு செய்யப்படாத சாதாரணப் பயணச்சீட்டு எடுக்கும் பயணிகள் ஒருபோதும் பதிவு செய்யப்பட்ட ரெயில் பெட்டிகளில் ஏறுவது இல்லை என்பது வடமாநிலங்களுக்கு ரெயில்களில் பயணம் செய்யும் ஒவ்வொரு பயணியின் அனுபவம் ஆகும். ஆனால் புதிய ரெயில்கள் விஷயத்தில் ரெயில்வே நிர்வாகம் தென்னக ரெயில்வேக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது இல்லையே என்பது எல்லோருடைய ஆதங்கம் ஆகும். ரெயில் பயணம் என்பது வசதி படைத்தவர்களைவிட, சாதாரண ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கே அத்தியாவசியத் தேவை ஆகும். ஆனால் ரெயில்வே நிர்வாகம் சில வழித்தடங்களில் ஓடும் ரெயில்களில் அதிகக் கூட்ட நெரிசலோ, ஏராளமான பயணிகள் பயணச் சீட்டு கிடைக்காமல் அவதிப்படும் சூழ்நிலையிலோ அவர்களுக்கு எல்லாம் வசதியாகக் கூடுதலாக சிறப்பு ரெயில்களை விட வேண்டும் என்பதுதான் மக்களின் கோரிக்கை ஆகும். ஆனால் இப்போது ரெயில்வே நிர்வாகம் இத்தகைய நேரங்களில் விடும் சிறப்பு சுவிதா ரெயில்களின் கட்டணம் ஏழை மக்களுக்கு எட்டாக் கனியாக இருக்கிறது, சாதாரண ரெயில் கட்டணங்களை விட மும்மடங்கு கட்டணம் இருக்கிறது.

ஆக, பயணிகளின் பணத்தைக் கறப்பதிலேயே குறியாக இருக்கும் இந்த ரெயில்வே நிர்வாகம் ரெயில்வே வரவு செலவுத் திட்டத்தில் ஏற்கனவே அந்தியோதயா எக்ஸ்பிரஸ் என்ற ஏழைகள் ரெயில், அதாவது முழுக்க முழுக்க பதிவு செய்யப்படாத ரெயில்வே பெட்டி கொண்ட சூப்பர் பாஸ்ட் ரெயில்களை விடும் அறிவிப்புகளை தென்னக ரெயில்வேயில் விரைவில் அறிமுகப்படுத்தவேண்டும். இதுபோல தொலைதூர ரெயில்களில் இரண்டு முதல் நான்கு வரை பதிவு செய்யப்படாத கூடுதல் ரெயில் பெட்டிகள் இணைக்கப்படும் என்ற அறிவிப்பையும் தென்னக ரெயில்வேயில் விரைவில் நிறைவேற்ற வேண்டும். இந்த அந்தியோதயா என்ற ஏழைகளின் ரெயிலையும், தீனதயாளு ரெயில் பெட்டிகளையும் விரைவில் அறிமுகப்படுத்தினால்தான் சாதாரண ஏழை, எளிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமே தவிர, சுவிதா ரெயிலால் அல்ல. இந்த யோசனையை ரெயில்வே நிர்வாகம் அனுதாபத்துடன் விரைவில் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும். எனவே ஏழை, எளிய மக்களுடைய நலனையும் சௌகரியத்தையும் கருதி, மேற்கூறிய கருத்துக்களை ரெயில்வே நிர்வாகம் விரைவில் நடைமுறையில் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.



* * *

# 351

ஆகஸ்ட் 2017

நேரம்— ஒரு மணி

(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:— ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் *ஏதாவது ஒரு புறம் மட்டும்* தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்.]

வினா எண் 1] மதிப்பெண்கள்: 60

கீழ்க்கண்ட புள்ளி விவரப் பட்டியலை உரிய முறையில் தட்டச்சு செய்து கொடுக:-

இந்தியாவில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்

| வங்கியின் பெயர் | இயங்கும் நிதி | | அரசுப் பத்திரங்கள் | |
|---|---|---|---|---|
| | 1991-92 | 1992-93 | 1991-92 | 1992-93 |
| | (ரூபாய் கோடியில்) | | | |
| பரோடா வங்கி | 1,780 | 24,130 | 2,103 | 21,370 |
| இந்தியா வங்கி | 23,211 | 23,178 | 1,990 | 2,128 |
| பஞ்சாப் வங்கி | 19,268 | 21,106 | 2,637 | 2,197 |
| கனரா வங்கி | 16,458 | 20,482 | ~~1,608~~ | 2,111 |
| இந்தியன் வங்கி | 11,022 | 14,760 | 2,025 | 2,311 |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | 9,395 | 10,784 | 2,003 | 2,271 |
| யூகோ வங்கி | 8,438 | 9,952 | 2,066 | 2,234 |
| சிண்டிகேட் வங்கி | 11,861 | 12,488 | 1,972 | 2,218 |
| அலகாபாத் வங்கி | 7,756 | | 1,047 | 1,556 |
| தேனா வங்கி | 4,107 | 2,855 | 1,101 | 1,344 |
| விஜயா வங்கி | 4,151 | ~~3,764~~ | 1,100 | 1,178 |
| ~~[illegible] வங்கி~~ | ~~14,409~~ | ~~15,820~~ | ~~3,148~~ | ~~3,354~~ |

குறிப்பு: 1991-92 மற்றும் 1992-93ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள சில தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் இயங்கும் நிதியும் அரசுப் பத்திரங்களின் மதிப்பும் மேலே உள்ள பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ளன.

③ I



வினா எண் 2]                                   [மதிப்பெண்கள்:40

கீழ்க்கண்ட அரசு ஆணையை உரிய முறையில் திட்டஞ் செய்க!--

த.நா. அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலன் – ஆதிதிராவிடர் குடியி/களில் /ருப்பு
பொது நிலையங்களைத் திறத்தல் – அறிவுரைகள் –
வெளியிடப்படுகின்றன.

சமூக நலத் துறை

அரசு ஆணை எண் 36                    நாள் 14 நவ. 1980.

ஆணை:

ஆதி திராவிடர் நலனுக்காக/ பல திட்டங்களை /அரசு
மேற்கொண்டு வருகிறது. ஆதி திராவிட மக்களை
பொது வாழ்க்கை ஓட்டத்தில் கொண்டுவருவது
அவசியம்.

தொடர்க/ புதியதாகத் திறக்கப்படும் பள்ளிகள்,
குழந்தை மையங்கள் போன்ற பொது நிலையங்கள்
ரு/ கூடியவரையில் ஆதி திராவிடர் குடியிருப்புகளில்
அமைய வேண்டும் என்று கருதப்படுகிறது.

வத்/ 2. அவ்வாறே வருங்காலத்தில் கிராமப்புறங்களில் /ளி
திறக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்கள், துவக்கப்
பள்ளிகள், மருத்துவமனைகள், நியாய விலைக்
கடைகள் போன்ற பொது அலுவலகங்களும் /ட
நிலையங்களும் கூடியவரையில் ஆதிதிராவிடர்
குடியிருப்புகளில் என்று (3) வேண்டும் (2) திறக்கப்பட (1) /மா.
அரசு ஆணையிடுகிறது. அந்தக் குடியிருப்புகளில்
தீ/ இதற்குத் தேவையான காலி இடம் இல்லையெனில்
அந்தக் குடியிருப்புகளை ஒட்டி உள்ள நிலங்களைத் /னைத்
தேர்ந்தெடுக்கலாம்.

(ஆ.ஆ.படி)

வி. கார்த்திகேயன்,
அரசு தலைமைச்செயலாளர்.

பெறுநர்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்,
சென்னை.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது

***



பி.அ.

# 928

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

அறிவியல் ஆய்வுகளில் சாதனை படைத்து கண்டுபிடிப்பு நிகழ்த்துபவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இந்தப் பரிசை உருவாக்கியவர் ஆல்பிரட் நோபல். அவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்வோம். சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர் இம்மானுவேல் நோபல். இவர் ஒரு பொறியாளர், அறிவியல் ஆய்வாளர். இவரது மனைவி கரோலினா. இவர்களுக்கு எட்டு குழந்தைகள் பிறந்தனர். இவர்களில் ஒருவர்தான் ஆல்பிரட் பெர்னாட் நோபல். சிறு வயதிலேயே அறிவியல் ஆய்வுகள் மற்றும் பொறியியல் ஆய்வுகளில் ஆல்பிரட் நோபல் தீவிர ஈடுபாடு காட்டினார். இவர் நைட்ரோ கிளிசரின் எனப்படும் வெடிபொருள் தயாரிப்பில் ஈடுபட்டார். சுரங்கம் மற்றும் பாறைகளை வெடி வைத்துத் தகர்க்க நைட்ரோ கிளிசரின் பயன்பட்டது. ஆனால் திரவ வடிவில் இருந்ததால் சிறிய கவனக்குறைவு ஏற்பட்டாலும் பெரிய விபத்துகள் ஏற்பட்டன. எனவே பாதுகாப்பான வெடி மருந்து தயாரிக்கும் ஆய்வில் ஆல்பிரட் நோபல் ஈடுபட்டார். ஒரு நாள் தனது ஆய்வுக் கூடத்தில் நைட்ரோ கிளிசரின் இருந்த பாட்டிலை எடுத்தபோது அதில் இருந்த திரவம் அருகே இருந்த சில ரசாயனக் கலவையில் கொட்டியது. சிறிது நேரத்தில் அந்தக் கலவை உறுதியான பசை வடிவத்தில் மாறியது. அதை ஆல்பிரட் நோபல் ஆராய்ந்தபோது அது சக்தி வாய்ந்த வெடிபொருளாக இருப்பதைக் கண்டு பிடித்தார். அதற்கு அவர் டைனமைட் என்று பெயரிட்டார். இது நைட்ரோ கிளிசரினை விட பாதுகாப்பாகவும் இருந்தது. இதையடுத்து பெரும் அளவில் டைனமைட் உற்பத்தியில் இறங்கினார். இதன் மூலம் அவர் பெரும் பொருள் சம்பாதித்தார். இந்த நிலையில் யுத்தகளத்தில் டைனமைட் பயன்படுத்தப்பட்டது., இதை அடுத்து மக்கள் அவரை மரண வியாபாரி என்று திட்டித் தீர்த்தனர்.

ஏராளமான செல்வம் இருந்தாலும் மரண வியாபாரி என்ற சொல் அவருக்கு மன வேதனையையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியது. திருமணம் செய்து கொள்ளாமல் தனிமையில் வசித்துவந்த அவருக்கு நண்பர்கள் யாரும் உதவ முன்வரவில்லை. இதனால் தனது வாழ்நாளை தனிமையில் கழித்தார்.

எனவே தனது செல்வத்தைப் பயன்படுத்தி பரிசுத் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நினைத்தார். இதன்படி மனிதகுல மேம்பாட்டுக்கு உதவும் வகையில் அறிவியல் ஆய்வுகள், கண்டுபிடிப்புகள் செய்பவர்களுக்கு ரொக்கப் பரிசு அளிக்கும் வகையில் நோபல் பரிசுத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதை அவர் தனது உயிலில் எழுதி வைத்தார். இதன்படி அவரது மரணத்திற்குப் பிறகு நோபல் பரிசுக் குழு அமைக்கப்பட்டு அதன்மூலம் ஆண்டுதோறும் இயற்பியல், வேதியியல், மருத்துவம், சமூக அறிவியல், இலக்கியம் மற்றும் அமைதி ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. ஆல்பர்ட் நோபல் வெடி மருந்து துறையில் மட்டும் ஆய்வு செய்து சாதனை படைக்கவில்லை. அறிவியலின் பல்வேறு துறைகளிலும் அவர் ஆய்வுகள் நடத்தினார். உயிரியல், சமூக அறிவியல் போன்ற துறைகளிலும் அவர் ஆய்வுகள் நடத்தி, பல்வேறு கண்டுபிடிப்புகளையும் நிகழ்த்தினார். தனது வாழ்நாளில் அவர் 355 கண்டுபிடிப்புகளைச் செய்து அவற்றுக்கான உரிமையைப் பெற்றார்.



* * *

5
11

# 328

ஆகஸ்ட் 2017

நேரம்— ஒரு மணி

(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:— ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் *ஏதாவது ஒரு புறம் மட்டும்* தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்.]

வினா எண் 1] [மதிப்பெண்கள்: 60

கீழ்க்கண்ட புள்ளி விவரப் பட்டியலை உரிய முறையில் தட்டச்சு செய்து கொடுக்க:--

பிரபு மளிகைக் கடை, மயிலாப்பூர் — விற்பனை வரவு

| | மாதம் | 2010 | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| 1,31,728 | | அரிசி | கோதுமை | துவரம் பருப்பு | சர்க்கரை | |
| | | (ரூபாயில்) | | | | |
| | ஜனவரி | 18,875 | 1,29,678 | 91,319 | 2,32,564 | /மா. |
| | பிப்ரவரி | 1,28,369 | 1,26,154 | 1,19,218 | 16,532 | |
| 39,/ | மார்ச் | 2,∧876 | 2,32,964 | 2,23,275 | ~~20,154~~ | /இருக்க |
| மா./ | ஏப்ரல் | 1,29,627 | 1,28,732 | 2,21,394 | 17,283 | |
| | மே | 1,26,583 | 2,30,584 | 1,24,719 | 20,392 | |
| 3/ | ஜூன் | 2,70,815 | 2,31,629 | 1,26,827 | ~~22,684~~ | /இருக்க |
| | ஜூலை | 2,31,104 | 3,32,832 | 1,28,636 | 324,276 | /ஜ். |
| | ஆகஸ்ட் | 1,29,894 | ∧ | 2,29,528 | 26,369 | |
| 28/ | செப்டம்பர் | 1,30,∧4 | 1,32,657 | 2,30,849 | 27,528 | |
| டோ/ | அக்டோபர் | 2,29,762 | 1,30,825 | 1,28,072 | 26,∧3 | /89 |
| 2/ | நவம்பர் | 2,18,973 | 2,31,928 | 1,31,194 | 28,764 | ∧2 |
| | டிசம்பர் | 1,32,831 | 2,∧547 | 2,32,263 | 30,832 | ∧32 |

குறிப்பு: மேற்கண்ட புள்ளி விவரப் பட்டி மயிலாப்பூர்,
ம்/ பிரபு மளிகைக் கடை 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் வெவ்வேறு மாதங்களில் சில மளிகை சாமான்கள் விற்பனை மூலம் பெற்ற வருமானத்தைக் காட்டுகிறது.

[திருப்புக....

வினா எண் 2]

மதிப்பெண்கள்: 40

கீழ்க்கண்ட தொழில் முறைக் கடிதத்தை உரிய முறையில் தட்டச்சு செய்க:--

ஏ. துரைசாமி, பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர்.

தொ.பே. எண் 63927154
12 கோவர்தன தெரு,
ராயப்பேட்டை,
சென்னை 600 014.
12 அக். 2016.

திரு. மு. கைலாசம்,
21 தெற்கு மாட வீதி,
மயிலாப்பூர்,
சென்னை 600 004.

ஐயா,

சென்னை, திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் /க
கோவில் தெரு, 12ஆம் இலக்கமிட்ட வீட்டில் குடியிருக்கும்
திரு. கு. குமாரசாமி என்ற என்னுடைய கட்சிக்/டைய /காரரு
உத்தரவின்பேரில் நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

இப்போது தாங்கள் குடியிருக்கும் சென்னை, மயிலாப்பூர்,
இருக்க/ தெற்கு மாட வீதி, 21ஆம் இலக்கமிட்ட வீட்டின் உடைமை
தங்களுக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு, குத்தகை
மன/ மற்றும் அடமானம் அடிப்படையில் கொடுக்கப்பட்டது.
வட்டியுடன் சேர்ந்து அடமானத் தொகையை எனது
நீ-/ கட்சிக்காரர் இரண்டு மாதங்களுக்கு முன்பு /இருக்க
தங்களிடம் செலுத்தி, வீட்டைக் காலி /உடைமையை /செய்து
தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்க/ அவருக்கு இந்த வீடு தன்னுடைய சொந்த
உபயோகத்திற்காகத் தேவைப்படுகிறது. எனவே.
இரண்டு/ இக்கடிதம் கிடைத்த மாதங்களுக்குள் வீட்டைக்
காலி செய்து உடைமையை எனது கட்சிக்காரரிடம்
ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தவறினால்
நீதிமன்றம் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க /நே.
நேரிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

த.ந.,

(ஏ. துரைசாமி)



***

S
III

# 953

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

உள்ளூர்ச் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை அனைத்தையும் நம் வீட்டிற்கே கொண்டு வந்து தருவது செய்தித் தாள்கள் என்றால் அது மிகையாகாது. காலை எழுந்தவுடன் நாம் முதலில் தேடுவது செய்தித்தாள்களையே. செய்தித்தாள்கள் நமக்குச் சிறந்த நண்பனாகவும் திகழ்கின்றன. செய்தித்தாள்கள் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் வெனிஸ் நாட்டிலும் வெளியாயின.

செய்தித்தாள்களை நாம் இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று நாளிதழ், மற்றொன்று இதழ்கள். இதழ்கள் வார, மாதம் இருமுறை, மாதம் போன்ற கால இடைவெளியில் வெளியாகின்றன. அதுபோல் நாளிதழிலும் காலை நாளிதழ், மாலை நாளிதழ் என்று இரு வகைகள் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன. இன்றைய தினம் இந்தியாவில் பல மாநில மொழிகளிலும் ஆங்கிலத்திலும் செய்தித்தாள்கள் வெளிவருகின்றன. செய்தித்தாள்கள் உலகில் ஆங்காங்கே உள்ள நிகழ்ச்சிகளைத் திரட்டித் தரும் பணியைச் செய்கின்றன. செய்திகளைத் திரட்டி செய்தித்தாளுக்கு வழங்க பல அரசு நிறுவனங்களும் சில தனியார் நிறுவனங்களும் செயல்படுகின்றன. செய்தியைத் தொலைபேசி, இணையம், டெலிபிரின்டர், செயற்கைக் கோள் போன்றவற்றின் மூலம் இவை அனுப்புகின்றன. இது தவிர உள்ளூர்ச் செய்திகளைத் திரட்ட செய்தித்தாள் நிறுவனங்கள் பல நிருபர்களைப் பணியில் அமர்த்தி உள்ளனர். அவர்களும் பல செய்திகளைத் திரட்டித் தருகிறார்கள். அச்செய்திகள் செய்தித்தாள் நிறுவனங்களால் அச்சிடப்பட்டு வாசகர்களுக்கு அளிக்கப்படுகின்றன. செய்தித்தாள்களில் வெறும் செய்திகள் மட்டுமின்றி பல கட்டுரையாளர்களின் கட்டுரைகளும் எழுத்தாளர்களின் படைப்புகளும் வெளியிடப்படுகின்றன. அரசு அறிவிப்புகள், வானிலைச் செய்திகள், விஞ்ஞானச் செய்திகள், விளம்பரங்கள் போன்ற பல அம்சங்கள் செய்தித்தாள்களில் வெளியாகின்றன. செய்தித்தாள்கள் நமக்குப் பலவிதப் பயன்களைத் தருகின்றன. செய்திகளை முழுமையாக அறிந்துகொள்ள உதவுகின்றன. உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகளைத் தெரிந்து கொள்ள உதவுகின்றன. மோசமான வானிலையை பொதுமக்களுக்கு அறிவிக்கவும் எச்சரிக்கவும் செய்தித்தாள்கள் பயன்படுகின்றன. அரசின் பல திட்டங்களைப் பொதுமக்களுக்கு எடுத்துச்சொல்லவும் நிகழ்ச்சிகளை அறிவிக்கவும் பயன்படுகின்றன. கட்டுரைகள் சமுதாயத்தைக் குறித்த விழிப்புணர்வை வாசகர்களுக்கு ஏற்படுத்துகின்றன. கதைகள், கவிதைகள் பொழுதுபோக்காகவும் பல நல்ல கருத்துக்களை அறிந்து கொள்ளவும் வகை செய்கின்றன. இது தவிர, பல செய்திகள் கோப்புகளாக மாற்றப்பட்டு ஆவணக் காப்பகங்களில் பாதுகாக்கப்படுகின்றன. இவை வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கின்றன என்பதும் உண்மையே. பொதுவில் செய்தித்தாள்கள் மக்களுக்குப் பொது அறிவையும் சமுதாயத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றன.

நாம் அனைவரும் செய்தித்தாள் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.



* * *

# 305

ஆகஸ்ட் 2017

நேரம்—ஒரு மணி

(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:— ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் *ஏதாவது ஒரு புறம் மட்டும்* தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்.]

வினா எண் 1 [மதிப்பெண்கள்: 60

கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியலை உரிய முறையில் தட்டச்சு செய்து கோடிடுக:—

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் முதலீடும் முன்பணமும்

| வங்கியின் பெயர் | முதலீடுகள் | | முன்பணம் | |
|---|---|---|---|---|
| | 1991-92 | 1992-93 | 1991-92 | 1992-93 |
| | (ரூபாய் கோடியில்) | | | |
| பரோடா வங்கி | 9,887 | 6,145 | 7,830 | 4,934 |
| இந்தியா வங்கி | 5,135 | 5,433 | 6,837 | 7,327 |
| பஞ்சாப் தேசிய | 7,052 | 7,277 | 8,350 | 9,915 |
| கனரா வங்கி | 5,230 | | 7,743 | 7,850 |
| இந்திய வங்கி | 4,842 | 5,192 | 6,752 | 6,646 |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | 2,642 | 2,947 | 3,114 | 3,675 |
| சிண்டிகேட் வங்கி | 2,738 | 2,979 | 3,409 | 3,242 |
| யூகோ வங்கி | 2,889 | 3,234 | 3,876 | 3,665 |
| அலகாபாத் வங்கி | 2,478 | 3,011 | 3,24 | 3,956 |
| தேனா வங்கி | 1,397 | 1,673 | 1,676 | 1,988 |
| விஜயா வங்கி | 1,101 | 1,267 | 1,540 | 2,605 |
| ஆந்திரா வங்கி | 1,400 | 1,499 | 1,904 | 1,908 |

குறிப்பு: மேலே உள்ள பட்டியலில் 1991-92 மற்றும் 1992-93ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள சில தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் முதலீடுகளும் வழங்கிய முன்பணமும் காட்டப்பட்டுள்ளன.

[திருப்புக....

வினா எண் 2) [மதிப்பெண்கள்: 40

கீழ்க்கண்ட அரசு அலுவல் முறைக் கடிதத்தை உரிய முறையில் தட்டச்சு செய்க:-

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. வி. ராமசாமி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி 620 008. | மாவட்ட சுகாதார அதிகாரி, திருச்சிராப்பள்ளி 620 018. |

கடித எண் 328/16, நாள் 15 டிச. 2015.

ஐயா,

பொருள்: மாவட்ட ஆட்சியர் மாநாடு - மாவட்ட நிலைமை குறித்த விவரங்கள் - கோருதல்.

பார்வை: அரசுத் தலைமைச் செயலகப் பொதுத் துறையின் கடித எண் 538/16-12, நாள் 10 டிச. 2015.

பார்வையில் கண்ட கடிதத்தின்படி, விரைவில் மாவட்ட ஆட்சியர் மாநாடு சென்னைத் தலைமைச் உள்ளது. நடைபெற செயலகத்தில் அப்போது மாவட்ட நிர்வாகம் குறித்து விவாதம் நடைபெற்று உள்ளது. அது தொடர்பாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொருள்கள்/ தங்கள் துறை சம்பந்தமான / குறித்து ஒரு அறிக்கை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(குறிப்பாக, சமீபத்திய வெள்ள ~~வறை~~ நிவாரண / நி. நடவடிக்கைகள் குறித்து ~~விளக்கம்~~ குறிப்புகள் / இருக்க தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து / டிசம்பர் / 2015 20ஆம் நாளன்று முற்பகல் 11 மணியளவில் எனது அலுவலகத்தில் தங்களோடு கலந்தாலோசனை செய்ய உள்ளேன். அதற்குத் தாங்கள் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.) 2. இக்கடிதத்தை மிக விரைவுத் தன்மை உடையதாகக் கருதுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள்,

ஆட்சியர்.

***

# 996

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்க்கும் பட்டறை பற்றி நமக்குத் தெரியும். சுத்தியல் சத்தம், வாகன பாகங்களை அடித்து நிமிர்த்தும் ஓசை, பழுது பார்ப்போரின் சந்தடி, பழுது பார்க்கப்படும் வாகனங்களின் என்ஜின் உறுமல் என்று ஒரே இரைச்சலாக இருக்கும். இதுபோல பல இடங்கள் உள்ளன என்பதை நாம் அறிவோம். ஒலி உயர்ந்து இருக்கும் அந்த இடங்கள் நம்மை அமைதி இழக்கச் செய்துவிடும் என்பதும் ஒரு உண்மை. இந்த ஓசை நம்மை பாதிக்காமல் இருக்க ஒரு புது வழி வந்துள்ளது. அது குறித்து இங்கு பார்ப்போம்.

நம்மை அமைதி இழக்கச் செய்யக் கூடியது ஒலி மாசு. ஓயாத பேரிரைச்சல் மனநிலையையே பாதித்து விடும் வீரியம் கொண்டதாகும். சிலருக்கு பணி நிமித்தமாக டர்பைன் அல்லது மோட்டார் போன்றவற்றின் அருகிலேயே இருக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஒரு நாளில் எட்டு மணி நேரம் தூங்கியது போக, மீதம் பத்து மணி நேரம் அவர்கள் பேரோசை தரும் இயந்திரங்களுடனே உழன்று கொண்டிருப்பார்கள். இந்த ஓசை நம் காதுகளை பாதிக்காத வகையில் மாற்றிவிட முடிந்தால் அது சுகமானதாக இருக்கும்.

குளிர் காலத்தில் பனிக்காற்று காதுகளுக்குள் நுழைந்து ஜலதோஷம் ஏற்படாமல் இருக்க இரு காதுகளிலும் அடைத்துக் கொள்ளும் பஞ்சு போல வடிவமைக்கப்பட்ட ஒரு ஜோடி காது அடைப்பான்கள் ஒலி மாசில் இருந்து தப்பிக்கும் வழியைத் தரப்போகின்றன. சுருங்கச் சொன்னால், இவை கோலி குண்டு அளவிலான இரு தனித்தனி பஞ்சு மூட்டைகள். இவற்றுக்குக் காது அடைப்பான் அமைப்பில் வடிவம் தரப்படும். சூழ்நிலையின் ஒலியைத் தம் முழுக் கட்டுப்பாட்டுக்குள் இவை கொண்டு வந்துவிடுகின்றன. குகைக்குள் செல்லும் இரயில் சத்தத்தைக் குறைக்க வேண்டும் என்றால், உங்களால் அப்படிச் செய்து கொள்ள முடியும். கேட்கும் இசையில் ஓர் இசைக் கருவியின் பங்களிப்பை ஒதுக்கிவிட நீங்கள் நினைத்தால், அதையும் உங்களால் செய்துகொள்ள முடியும். தனி மனிதனின் உணர்ச்சிகளில் கைவைக்கிறது இந்தக் கருவி. ஒருவர் எந்த சூழ்நிலையில் இருக்கிறாரோ அதற்கு ஏற்ப தனிமனித உணர்ச்சி நிலையை இது நேர் செய்து தருகிறது. ஸ்மார்ட் போனில் இதற்கான தனி ' ஆப் ' நிறுவப்படுகிறது. டாப்லர் லேப் இதை வடிவமைத்து உள்ளது. இது கம்பியில்லா காது அடைப்பான்களை இயக்கும். இந்த அடைப்பான்களை காதுகளுக்குள் அடைத்துக் கொண்டால் வெளியில் இருந்து வரும் ஒலி அலைகளை இந்த 'ஆப் ' அப்படியே மட்டுப்படுத்தி விடுகிறது. கடுமையான இரைச்சல் மிகுந்த இடங்களில் அந்தப் பேரோசையை வடிகட்டிவிடும் கட்டளையை இந்த ஆப் காது அடைப்பானுக்குத் தர, அக்கட்டளைக்கு ஏற்ப காது அடைப்பான்கள் இயங்கி தனிமனிதரைச் சேரும் ஒலி மாசைக் குறைத்துவிடுகின்றன. இது முதல் அனுகூலம். இரண்டாவதாக ஒரு பயன்பாடும் உள்ளது. தங்களது இந்தப் புதிய ஆப் மற்றும் காது அடைப்பான் தொழில் நுட்பத்தின் வெற்றி இதில்தான் உள்ளது என்கிறார்கள் இதன் கண்டுபிடிப்பாளர்கள். ஒலி மாசு பாதிப்பைத் தடுக்கும் வழி.



* * *

# 393

## ஆகஸ்ட் 2017

நேரம்— ஒரு மணி
(பெரும மதிப்பெண்கள்: 100)

[குறிப்பு:— ஒவ்வொரு வினாவையும் தனித் தனித் தாளில் *ஏதாவது ஒரு புறம் மட்டும்* தட்டச்சு செய்க. எழுத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து, ஒழுங்காகவும் அழகாகவும் சொற் சுருக்கங்களை விரிவுபடுத்தியும் சரியான முறையில் தட்டச்சு செய்ய வேண்டும். தேவையான இடங்களில் *எண்களுக்கு நிறுத்தக் குறிகள் இடவும்*]

வினா எண் 1] [மதிப்பெண்கள்: 60

கீழ்க்கண்ட புள்ளி விவரப் பட்டியை உரிய முறையில் தட்டச்சு செய்து கொடுக்க:—

இந்தியாவில் உள்ள சில பொதுத் துறை வங்கிகளின் வரவு

| | வங்கியின் பெயர் | வட்டி வருமானம் | | மொத்த வருமானம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2002 | 2003 | 2002 | 2003 | |
| | | (ரூபாய் கோடியில்) | | | | |
| மா/ | அலகாபாத் வங்கி | 3,095 | 2,570 | 2,658 | [illegible] | ⅄ 2273 |
| | பரோடா வங்கி | 2,030 | 2,195 | 2,334 | 2,799 | |
| மா/ | ஆந்திரா வங்கி | 5,956 | 6,098 | 6,949 | 7,359 | |
| (6,371) | இந்தியா வங்கி | 5,594 | 5,928 | 6,712 | 7,⅄1 | ⅄ 57 |
| இருக்க/ | மகாராட்டிர வங்கி | ~~1,998~~ | 2,082 | 2,306 | 2,442 | |
| | கனரா வங்கி | ⅄ | 6,692 | 7,799 | 8,170 | |
| மத்திய⅄ | இந்திய⅄ வங்கி | 4,657 | 5,073 | 5,258 | 5,627 | |
| ரேஷன்⅄ | கார்ப்பரே⅄ வங்கி | 1,946 | 2,188 | (2,634 | 2,328) | /மா. |
| | தேனா வங்கி | 1,708 | 1,772 | 2,061 | 32,209 | /நி. |
| | இந்தியன் வங்கி | 2,294 | 2,532 | 2,496 | 3,057 | ⅄7 |
| 48⅄ | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | 3,171 | 3,⅄6 | 3,901 | 4,626 | ⅄0 |
| 3⅄ | ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் | 3,040 | 3,⅄04 | 3,514 | 3,836 | |

குறிப்பு: மேலே உள்ள பட்டியல் 2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள சில பொதுத் /திருத்த துறை வங்கிகள் ஈட்டிய வட்டி வருமானத்தையும் மொத்த வருமானத்தையும் காட்டுகிறது.

[மதிப்பெண்கள்: 40

வினா எண் 2]

கிழ்க்கண்ட அலுவல் முறை நடவடிக்கைகளை உரிய முறையில் தட்டச்சு செய்க:—

மதுரை மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. க. மாதவன், இ.ஆ.ப.,
ஆட்சியர்.

ஆர்.சி. எண் 693/21 நாள் 2 பிப். 2017.

பொருள்: பணியாளர் - மதுரை மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் நியமித்தல்.

பார்வை: மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரின் கடித எண் 957/17-3, நாள் 25 ஜன. 2017.

---

மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரால் /று
பரிந்துரைக்கப்பட்ட திரு. மு. குருசாமி என்பவர்
மதுரை மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில்
மிக்கப்/ சுருக்கெழுத்தாளராக நியமிக்கப்படுகிறார்.
தொடர்ந்/ இந்த நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.
எந்த நேரத்திலும், முன்னறிவிப்பு ஏதுமின்றி, எந்த /யும்
விதமான காரணங்கள் தரப்படாமலும் / நியமனம் /இந்த
முடிவுறுத்தப்படும்.

2. பணியில் சேர்வதற்காக பயணப்படியோ /ண
வேறு ஏதேனும் படியோ தரப்படமாட்டாது. மதுரை
மாவட்டத்தில் எந்த ஊரிலும் பணியாற்ற இவர்
அ.ப./ தயாராக இருக்க வேண்டும். 3. பணியில் உடனடியாகச்
சேருமாறு இவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கால
தாமதமானால் இந்த நியமனம் ரத்து செய்யப்படலாம்
இருக்கு/ ~~என்று~~ தெரிவிக்கப்படுகிறது. ~~இதனைக்~~ /நீ.

ஆட்சியர்.

பெறுநர்
திரு. மு. குருசாமி,
21 சிவகங்கை சாலை,
மதுரை 625020.

நகல்
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மதுரை 625 025.
ஊதியப்பட்டிக் கோப்பு

***